# பெண்கள் இணைப்புக்குழு

# ஆண்டு அறிக்கை

## 2024 -25

நம்பர் 10, கிழக்குத்தெரு, கொளத்தூர், சென்னை- 600 099,

தொலைபேசி: 044 - 25501257, மின்அஞ்சல் : tamilnaduwomenscollective@gmail.com,

இணையதளம்: www.womenscollective.net

# தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின்

# 2024 -25 ஆண்டு அறிக்கை

1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் தேதி ஒத்த கருத்துடைய பெண்கள் தலைமையில் செயல்படும் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து பெண்கள் சக்தியை ஒன்று திரட்டி சரித்திரம் படைக்க இணைந்து பணி செய்ய முடிவு செய்தது. தனி அடையாளங்களை விடுத்து பொது அடையாளத்தில் பயணிக்க எண்ணி பெண்கள் இணைப்பு குழு என்ற பெயரில் இணைந்து செயல்படுவதற்கான கொள்கைகள் நெறிமுறைகள் வகுத்து பணியை ஆரம்பித்தது. எங்களுடைய மாநில தலைவி திருமிகு .ஷீலு அவர்கள் தலைமையில் வழிகாட்டுதலில் அர்ப்பணிப்பில் ஆறு மாவட்டங்களில் தொடங்கிய எமது அமைப்பு இன்று தமிழகத்தில் **கன்னியாகுமரி ,திருநெல்வேலி, தென்காசி ,தூத்துக்குடி, மதுரை ,தேனி திண்டுக்கல், நீலகிரி ,திருச்சி ,பெரம்பலூர் ,சேலம் , கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை ,தர்மபுரி ,கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ,திருவள்ளூர் மற்றும் சென்னை ,உட்பட 21 மாவட்டங்களில்**

- 25 பாராளுமன்றங்கள்
- 56 சட்டமன்றங்கள்
- 4 மாநகராட்சி
- 65 தாலுகா
- 66 ஊராட்சி ஒன்றியம்
- 16 நகராட்சி
- 37 பேரூராட்சி
- 456 ஊராட்சிகள்
- 1160 கிராமங்களில் 35 வட்டார அமைப்புகளாக வளர்ந்தோங்கி நிற்கிறது.

பெண்கள் இணைப்பு குழு ஒடுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்ட மக்கள் அதிலும் குறிப்பாக பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், வளரிளம் பெண்கள், முதியவர்கள், பெண் விவசாயிகள், ஆண்கள், ஆண் விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநர் இவர்களை இலக்கு மக்களாக கொண்டு அவர்கள் மேம்பாட்டிற்காகவும் அவர்களுடைய உரிமைகளுக்காகவும் பணி செய்து வருகிறது.

மனித நேயத்தை சித்தாந்தமாக கொண்டு.

மக்கள் பங்கேற்பு அணுகு முறையில்.

பாலியல், ஜாதி ,மத, இன ,மொழி ,கலாச்சார ,அரசியல் பாகுபாடற்ற தரமான கல்வி சுகாதாரம், பாதுகாப்பான சுற்றுச்சூழல் மற்றும் உணவு உத்தரவாதம் உறுதி செய்யப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் நிலைத்த நீடித்த வளர்ச்சியுடன் கூடிய மனிதநேயம் உள்ள சமத்துவ சமதர்ம சமநீதி சமுதாயத்தை உருவாக்குவதை தொலைநோக்காக கொண்டு.

விழிப்புணர்வு ,ஒருங்கிணைத்தல், அணி திரட்டுதல்,வழக்குரைத்தல் இவற்றை செயல் திட்டங்களாக வகுத்து.

பயிற்சி, கருத்தரங்கு, மாநாடு, கலை நிகழ்வு, பிரச்சாரம், தோழமை மற்றும் கூட்டமைப்பு இவற்றை வழிமுறைகளாகக் கொண்டு,

## *குறுகிய கால நோக்கமாக :*

1. ஜனநாயக மதிப்பீடுகளைக் கொண்ட பெண் தலைவர்களையும் இளம் தலைமுறைகளையும் உருவாக்குதல்.

2. ஒடுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்ட சமூகத்தில் இருந்து தலைவர்களை உருவாக்குவது.

3. சுற்றுச்சூழல் சீர் கெட்ட நிலையை மாற்றுதல்.

4. பெண்கள் மீதான வன்முறைகளை தடுப்பதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்துவது.

5. மது போதைப் பொருள் இல்லாத வன்முறை இல்லாத கிராமங்களை உருவாக்குவது.

6. சமுதாயத்தின் மூத்த குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அரசின் திட்டங்களை பெறச் செய்வது.

7. பேரிடர் மற்றும் புவி வெப்பமடைதல் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல்.

8. மரபணு மாற்றத்திற்கு எதிரான பிரச்சாரம் செய்தல்.

9. பெண் விவசாயிகளுக்கு விவசாயி என்ற அந்தஸ்து பெறச் செய்தல்.

10. குடும்ப அளவில் பாதுகாப்பான உணவு உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவது.

11. இயற்கை விவசாயம் சூழியல் விவசாயம், சிறுதானிய விவசாயத்தை பரவலாக்குவது.

12. பெண்கள் கூட்டு விவசாயம் வீட்டு தோட்டம் மாடி தோட்டம் செய்ய வலியுறுத்துவது.

13. பெண்கள் நில உரிமை பெறச் செய்வது.

14. நிலம் உழைப்பு கூலி மற்றும் சந்தை ஆகியவைகளில் உள்ள பாலின பாகுபாடுகளை ஒழிப்பது.

15. சிறுதானிய உற்பத்தி சிறுதானிய பயன்பாடு மதிப்பு கூட்டுதல் இவற்றை அதிகப்படுத்துவது.

16. வீட்டுத் தோட்டம் மாடித்தோட்டம் இயற்கை முறையில் செய்ய சிறுவர்களை ஊக்குவிப்பது.

17. பாரம்பரிய விதை சேகரிப்பு பராமரிப்பு செய்து விதைகளை பகிர்ந்து கொள்வதை ஊக்கப்படுத்துதல்.

18. பாலின சம நீதி குழுக்களை அமைத்து விழிப்புணர் பயிற்சி அளித்தல்.

19. பெண் விவசாயிகள் ஆண் விவசாயிகளை சங்கமாக அமைத்து விழிப்புணர்வு கல்வி அளித்தல்.

20. சிறுவர் இளைஞர் முதியோர் அமைப்புகளை உருவாக்கி பயிற்சி அளித்தல்.

## ***2024-25 ஆம் ஆண்டின் திட்ட குறிக்கோள்:***

ஒடுக்கப்பட்ட விவசாயிகளின் குடும்ப உணவு உத்தரவாதம் மற்றும் வாழ்வாதாரம் உறுதி செய்வது.

காலநிலை மாற்றத்தை தாங்கும் ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்கும் செயல்களை தொடங்குவது.

பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதன் மூலம் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதை உறுதி செய்தல்.

## *விழிப்புணர்வு கல்வி:*

இயற்கை விவசாயம், சூழியல் விவசாயம், கூட்டு விவசாயம், சிறுதானிய விவசாயம், மானாவாரி விவசாயம், சிறுதானிய சத்துக்கள், பாரம்பரிய விதை, சேமிப்பு , பராமரிப்பு, காலநிலை மாற்றம் , காலநிலை மாற்றத்தை தாங்கி வளரும் சிறுதானியங்கள் பாதுகாப்பான உணவு, வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம் உலகமயமாக்கல் WTO ஒப்பந்தம். மரபணு மாற்று விதைகள், உணவுப் பொருட்கள், நீர் மேலாண்மை, பிளாஸ்டிக் ஒழிப்பு போன்ற வெவ்வேறு தலைப்புகளில் **1,06,639** உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சமூக பகுப்பாய்வு பாலியல் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை, பெண்கள் உரிமை, குழந்தைகள் உரிமை, தொழிலாளர்கள் உரிமை, போதைப் பொருட்கள் தடை செய்வது போன்ற தலைப்புகளில் **53,066** உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டது.

## *ஒருங்கிணைப்பு சங்கங்கள்:*

**1,160** கிராமங்களில் உள்ள

**1,060** சங்கங்களில் **36,091** உறுப்பினர்கள்

**125** ஆண்கள் சங்கங்களில் **1,672** உறுப்பினர்கள்

**540** சிறுவர் பஞ்சாயத்துக்கள் **8,659** உறுப்பினர்கள்

**97** வளர இளம் பெண்கள் சங்கம் **1,048** உறுப்பினர்கள்

**59** இளைஞர் சங்கம் கொண்ட **616** உறுப்பினர்கள்

**375** முதியோர் உரிமை சங்கம் **5,229** முதியோர்கள்

**40** வயதுக்கு உட்பட்ட ஆண்களையும் பெண்களையும் உறுப்பினர்களாக கொண்ட பாலின சமநீதி குழுக்கள் **214** கிராமங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. **131** ஆண்கள் பாலின குழுக்களில் **862** உறுப்பினர்கள் உள்ளனர் **219** பெண்கள் பாலின சம நீதி குழுக்களில் **1,752** உறுப்பினர்கள் உள்ளனர்.

பணியாளர்கள் மற்றும் பாலின சமநீதி குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பள்ளியில் ஏற்படுத்தப்பட்ட ஐசிசி கமிட்டியில் உறுப்பினர்களாக உள்ளனர்.

## *களஞ்சியம் அமைப்பு சாரா தொழிலாளர்கள் சங்கம்:*

பெண்கள் இணைப்பு குழு ஒருங்கிணை க்கப்படாத அமைப்பு சாரா தொழிலாளர்களின் உரிமைகளுக்காக தொழிற்சங்கம் பதிவு செய்யப்பட்டு உறுப்பினர்களை வாரியத்தில் இணைத்து அவர்கள் அரசின் திட்டங்களை பெற வழிநடத்தப்படகிறார்கள்.

## *சிறுவர் பஞ்சாயத்து:*

நாளை இந்த நாட்டை ஆளக்கூடிய நிர்வகிக்கக்கூடிய இன்றைய சிறுவர்களை தலைமை பண்புள்ளவர்களாக சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டவர்களாக மற்றவர்களுக்காக குரல் கொடுப்பவர்களாக ஊழலற்ற தலைவர்களாக உருவாக்க அவர்களுடைய தகவல்களை மதிப்பீடுகளை வளர்த்தெடுக்க பெண்கள் இணைப்பு குழு கிராமங்கள் தோறும் சிறுவர் பஞ்சாயத்துக்களை உருவாக்கியது.

**21** மாவட்டங்களில் **524** சிறுவர் பஞ்சாயத்துக்கள் **8,659** உறுப்பினர்கள் உள்ளனர்.

சிறுவர் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு ஆளுமை திறன் வளர்ப்பு பஞ்சாயத்து சட்டம் கிராம சபை சமூகப் பகுப்பாய்வு பாலின பாகுபாடு பாலின சமத்துவம் பாதுகாப்பான உணவு வீட்டுத்தோட்டம் மாடி தோட்டம் பேரிடர் மேலாண்மை யோகா கவிதை கட்டுரை மற்றும் பேச்சுப் போன்ற அவர்களுடைய திறன்களை வளர்த்தெடுப்பதற்கான பல்வேறு பயிற்சி முகாம்கள் கிராம அளவிலும் வட்டார அளவிலும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகிறது .இந்த ஆண்டு நடந்த சிறுவர் பஞ்சாயத்து மாநில முகாம் சென்னை பெண்கள் இணைப்புக்குழு வளாகத்தில் வைத்து மே மாதம் **15, 16, 17** பேய்களில் நடைபெற்றது அதில் அவர்களுடைய திறன் வளர்ப்பதற்கான பயிற்சிகள் பல்வேறு ஆளுமைகளால் கொடுக்கப்பட்டது இறுதியாக போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் மாநில அளவில் இணையவழியில் நாலாவது ஞாயிற்றுக்கிழமை **4**மணியிலிருந்து**5**மணிவரை சிறுவர்களுக்கான தலைப்புகளில் இணையவழியில் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

## *முதியோர் உரிமை சங்கம்:*

சமுதாய வளர்ச்சிக்கு தங்களின் உழைப்பையும் அனுபவ அறிவையும் பங்களித்த முதியோர்களையும் அரவணைக்கும் நோக்கத்துடன் அவர்கள் உரிமைகளும் பாதுகாக்கப்பட முதியோர் உரிமை சங்கங்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் தங்கள் கருத்துக்களை அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான தளமாக செயல்பட்டு வருகிறது வருடத்திற்கு ஒருமுறை உலக முதியோர் தின நாள் அக்டோபர் முதல் நாள் அன்று முதியோர்களை ஒருங்கிணைத்து அவர்களுடைய பிரச்சினைகளுக்கான அரங்கு கூட்டம் நடத்தப்படுகிறது மற்றும் மருத்துவ முகாம்கள் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகிறது முதியோர்களுக்கு தொழிற்சங்கங்கள் மூலம் முதியோர் பென்ஷன் வாங்கி கொடுக்கப்படுகிறது.

## *சேமிப்பு குழு:*

பெண்களின் பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்துவதற்காக குடும்பங்கள் கடன் பிடியிலிருந்து மீளுவதற்காக கடந்த **31** ஆண்டுகளாக சேமிப்பு குழுக்களை உருவாக்கி வங்கியோடு தொடர்பு ஏற்படுத்தி வங்கி கடன் பெற்று பெண்கள் சுயமாக கைத்தொழில் சிறு தொழில் செய்ய பெண்கள் பெயரில் சொத்துக்களை உருவாக்க வருமானம் வரக்கூடிய தொழில்கள் செய்ய இந்த சேமிப்பு குழுக்கள் உதவியது பெண்களுடைய முடிவெடுக்கும் திறன் தலைமை பண்பு வளர்த்தெடுக்கப்பட்டது **1,189** சேமிப்புக் குழுக்கள் **17,687** உறுப்பினர்கள் **353** சுயதொழில் செய்யும் உறுப்பினர்கள் ஆறு விதமான கூட்டு தொழில் செய்யும் **34** உறுப்பினர்கள் **23** ஆண்கள் சேமிப்புக் குழுக்கள் **341** உறுப்பினர்கள் **70** முதியோர் சேமிப்பு குழுக்கள் **999** உறுப்பினர்கள் சேமிப்பு திட்டத்தில் உள்ளனர்

அரசு அங்கீகாரம் கொடுத்த மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள் இன்று பெண்களை கடன் பிடியிலிருந்து வெளிவந்த பெண்களை மீண்டும் கடலுக்குள் தள்ளி விட்டது இன்று இந்த நுண்நிதி கடன்களை கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள் கடன்களை அடைக்க முடியாமல் ஊரை விட்டு செல்கிறார்கள் எந்த சொத்துக்களை கடன் பிடியில் இருந்து மீட்டார்களோ அந்த சொத்துக்களை விற்கப்படும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் இந்த நிலையை அரசு கவனத்தில் எடுத்து இந்த நுண்நிதி நிறுவனங்களை தடை செய்ய வழக்குரைத்தல் செய்யப்பட்டு வருகிறது.

## களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம்:

80 சதவீதம் விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண் விவசாயிகளுக்கு குறிப்பாக விவசாயி விவசாய கூலிகள் ஆடு மாடு வளர்ப்போர் மீனவர் உப்பள வேலை செய்பவர்கள் மற்றும் காடுகளில் பொருள் சேகரிப்பவர்கள் விவசாயி என்ற அந்தஸ்து அங்கீகாரம் கிடைக்க [வழிவகை செய்து வருகிறது] அரசோடு வழக்குரைத்தல் செய்து வருகிறது நிலங்கள் வளங்கள் வாய்ப்பும் கட்டுப்பாடு பெண்களுக்கும் கிடைக்க பெற்றால் தான் விவசாயம் வளம் பெறும் நாடும் நலம் பெறும் அதனால் பெண் விவசாயிகள் ஒருங்கிணைக்கப்பட்டு பல்வேறு விழிப்புணர்வு கொடுக்கப்படுகிறது.

## ஆண் விவசாயிகள் சங்கம்:


பெண்கள் இணைப்பு குழு தொடங்கிய காலகட்டத்தில் இருந்து ஆண்களும் சங்கங்களாக ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறார்கள் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள ஆண்கள் சங்கங்களும், பெண்கள் இணைப்பு குழுவில் உள்ளன அவர்களுக்கும் பல்வேறு விழிப்புணர்வு பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது சேமிப்பு குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறார்கள் வங்கிகள் ஆண்கள் குழுக்களுக்கு கடன் கொடுப்பதில்லை ஆனாலும் அவர்களுக்குள்ளே சேமித்து கடன் எடுக்கிறார்கள் தொடர்ந்து நம்மோடு பங்கெடுத்து கொள்கிறார்கள் ஒரு சில பிரச்சாரங்களிலும் நம்மோடு இணைந்து செயல்படுகிறார்கள் பெண்கள் சங்கங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள் சங்கங்கள் உள்ளன நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.ஆண்கள் சங்கங்களில் 25 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள ஆண்களில் விவசாயிகள் விவசாயக் கூலிகளாக இருக்கும் ஆண்களை 113ஆண்கள் விவசாய சங்கங்களாக 1725 உறுப்பினர்களாக கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுபவர்களாக இருப்பதால் அவர்களுக்கு இயற்கை விவசாயம் சிறுதானிய விவசாயம் சூழியல் விவசாயம் கூட்டு விவசாயம் பல பயிர் சாகுபடி புதிய விவசாய முறைகள் குறித்த விழிப்புணர்வு பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது ஆண்களும் கூட்டு விவசாய குழுக்கள் வைத்துள்ளனர்.

# நீர் மேலாண்மை:

சமீப காலமாக பருவ கால மாற்றத்தால் குறித்த நேரத்தில் மழை பெய்யவில்லை குறைந்த நாட்களில் அதிக மழை அதிக வறட்சி புயல் விவசாயத்தில் பாதிப்பை உருவாக்கி வருகிறது அதை சமாளிக்க கூடிய நீர் மேலாண்மைக்கான மேட்டுப்பாத்தி முறை முடக்கு முறை பல பயிர் சாகுபடி புஞ்சை பயிர் விவசாய ஒன்றை நாட்டு முறை மரம் நடுதல் சிறுதானிய சாகுபடி போன்ற முறைகளை கையாள பெண்கள் இணைப்பு குழு கற்றுக் கொடுத்து வருகிறது.

வீடுகளில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் அவசியத்தை எடுத்துரைப்பதன் மூலம் மழை நீர் சேகரிப்பு திட்டத்தை புத்தகம் செய்திருப்பவர்கள் எண்ணிக்கை 5365.

# *பெண்கள் கூட்டு விவசாய குழுக்கள்:*







விவசாயக் கூலிகள் தனித்து வாழும் பெண்கள் மற்றும் விதவைகள் குடும்ப உணவு உத்தரவாதத்திற்காக கிராமங்களில் நிலங்களை குத்தகை வாங்கி இயற்கை விவசாய முறையில் உணவுக்கான உற்பத்தி பயிர்கள் செய்ய ஊக்கப்படுத்தி வருகிறது குறிப்பாக பல பயிர் சாகுபடி முறையில் சிறு தானியங்கள் பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் கீரை காய்கறிகள் கலந்து பயிர் செய்ய வலியுறுத்தப்படுகிறது இதுவரை 202 கூட்டு விவசாய குழுக்களில் 1,362 பெண்கள் உள்ளனர் அவர்கள் ஏக்கரில் விவசாயம் செய்கின்றனர் இதன் மூலம் பெண்களுக்கு நிலத்தின் மீதான உரிமை விதை மீதான உரிமை வளர்ந்து வருகிறது முடிவெடுக்கும் திறன் அதிகரித்து வருகிறது நிலமும் சுற்றுச்சூழலும் உடல் நலமும் மேம்படுகிறது.

## கூட்டமைப்பு:

கிராமங்களில் இருந்து ஒரு பிரதிநிதி வட்டார அமைப்புக்கும் வட்டார அமைப்பிலிருந்து 5 பிரதிநிதி மாவட்ட கூட்டமைப்பிற்கும் சென்று பகுதி தகவல்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளுதல் மக்களை பாதிக்கக்கூடிய பிரச்சனைகள் குறித்தும் அதை சரி செய்வதற்கு எடுக்கக்கூடிய பிரச்சாரத்திற்கான அணி திரட்டுதல் வழக்குரைத்தல் செய்வதற்கான திட்டமிடல் கண்காணித்தல் மதிப்பீடு செய்தல மேலும் கிராமசபை கூட்டங்கள் மாவட்ட விவசாயக் குறை தீர்ப்பு நாள் கூட்டங்களில் நடக்கும் விஷயங்களை பகிர்ந்து கொள்ளுதல் போன்ற தகவல்கள் பேசப்படுகிறது. மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் வருடம் ஒருமுறை நடக்கும் பெண்கள் இணைப்புக்குழு பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு பெண்கள் இணைப்பு குழு ஆக்கபூர்வமாக செயல்படுவதற்கான முக்கிய எதிர்கால திட்டங்களை முடிவு செய்கிறார்கள்.

இந்த ஆண்டு **9,906** கிராம உறுப்பினர்கள் கலந்து கொண்ட **415** வட்டார கூட்டமும் **443** மாவட்ட பிரதிநிதிகளை கொண்ட **28** மாவட்ட பிரதிநிதிகள் கூட்டமும் 547 உறுப்பினர்கள் பங்கெடுத்த மாநில பொது குழு கூட்டமும் நடைபெற்றது.

## *அரசியல் அதிகாரம் அளித்தல்:*

பெண்கள் முடிவெடுக்கும் திறனை அதிகப்படுத்துவதற்காக பெண்கள் கட்சி சாராத பஞ்சாயத்து அரசியலில் 2021 ஆம் ஆண்டு நடந்த ஊராட்சி மற்றும் நகர சபை தேர்தலில் பங்கெடுக்க பயிற்சிகள் கொடுத்து தயார் செய்யபட்டது

### வெற்றி பெற்றவர்கள்:

96 பஞ்சாயத்து தலைவர்கள்

154 வார்டு உறுப்பினர்கள்

19 ஒன்றிய வார்டு உறுப்பினர்கள்

11 பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள்

5 நகராட்சி வார்டு உறுப்பினர்கள் உட்பட 233 கிராமங்களில் 274 உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர் அதில் 176 பெண்கள் 97 பேர் ஆண்கள்.

## கிராம சபை கூட்டம்:

**2024 -25** ஆம் ஆண்டு பெண்களினுடைய அடிப்படை தேவைகள் பட்டியலிட பெண்கள் இணைப்பு குழு மாதிரி கிராம சபா கூட்டங்கள் நடத்தப்பட்டு தயார் செய்து அந்த தீர்மானங்களை அரசு நடத்தும் கிராமசபை கூட்டங்களில் தீர்மானமாக வைக்கப்படுகிறது. அந்த வகையில் பெண்கள் இணைப்பு குழு நடத்திய மாதிரி கிராமசபை கூட்டம் **62** பங்கெடுத்தவர்கள் **4,432** உறுப்பினர்கள் அரசு நடத்திய **6** கிராம சபை கூட்டங்களில் பங்கெடுத்தவர்கள் **22,747** உறுப்பினர்கள் பொதுவாக வைக்கப்பட்ட வழக்குரைத்தல்கள் **9**

1. அரசின் நியாய விலை கடைகளில் சிறு தானியம் வழங்க கோரி.

2. அரசு உணவு வழங்கும் திட்டங்களான காலை சிற்றுண்டி மதிய உணவுத் திட்டம் சிறைச்சாலைகள் மாணவர்கள் தங்கும் விடுதிகள் மருத்துவமனைகள் மற்றும் அம்மா உணவகங்களில் சிறுதானிய உணவுகள் வழங்க கோரி.

3. பெண்கள் கூட்டு விவசாய குழுவிற்கு பஞ்சாயத்தில் உள்ள பயன்படுத்தாத நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு வழங்க கோரி.

4. மரபணு மாற்று கடுகை தடை செய்யக்கோரி.

5. செறிவூட்டப்பட்ட அரிசியை உடனடியாக நிறுத்தி வைத்து ஆய்வுக்கு உட்படுத்திய பிறகு வழங்க கோரி.

6. அனைத்து மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்க கோரி.

7. பஞ்சாயத்து எல்லைக்குள் போதைப் பொருட்கள் நடமாட்டத்தை ஒழிக்க கோரி.

8. பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலுமாக தடை செய்யக்கோரி.

9. காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்த மரங்களை நடக்கோரி.

இந்த மனுக்கள் கிராம சபை கூட்டங்கள் வாயிலாக அரசுக்கு அனுப்ப வழக்குரைத்தல் செய்யப்பட்டது.

## *அம்பேத்கார் தினம்:*










அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதியை கடந்த 30 ஆண்டுகளாக பெண்கள் இணைப்பு குழு தலித் உரிமை நாளாக அந்த தினத்தை அனுசரித்து வருகிறோம் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு அவர் இயற்றிய அரசியலமைப்பு சட்டங்கள் அந்த சட்டங்கள் திருத்தப்படுவது குறித்தான விளக்கங்கள் குறித்து பேசப்படுகிறது இந்த ஆண்டு 36 பிரச்சாரங்களில் 2290 உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

## *தொழிலாளர் தினம்:*





BREAKING NEWS LIVE

தமிழ்நாடு 2.5.2025

BREAKING NEWS LIVE

தினகாற்று
தினம் ஒரு பார்வை
நடுநிலை காலை நாளிதழ்
RNI No : TNTAM / 65666 / 2015 / 65666

## மதுரை



## களஞ்சியம் அமைப்புசாரா தொழிலாளர் சங்கம் சார்பாக தொழிலாளர் தினம் செல்லம்பட்டியில் நடத்தப்பட்டது.தொழிலாளர் உரிமைகள், நலவாரிய பயண்கள், தொழிற்சங்க உறுப்பினர் சேர்த்தல்,விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழுவின் களஞ்சியம் அமைப்புசாரா தொழிலாளர்கள் சங்கம் மாநில சிறப்புத்தலைவர் K.ஜோதி,தொழிற்சங்க பிரதநிதிகள் கலந்து கொண்டு பிறப்பிக்கப்பட்டது

மாவட்ட தலைமை நிருபர்:பாண்டீஸ்வரன் BREAKING NEWS

செய்திகள் மற்றும் விளம்பர தொடர்புக்கு 9345 368683

இந்த ஆண்டு நடத்தப்பட்ட **99** தொழிலாளர் தின பிரச்சாரத்தில் 3440 பேர் பங்கெடுத்துள்ளனர் தொழிலாளர்கள் வேலை நெருக்கடி 100 நாள் வேலை குறைவு தொழிலாளர் உரிமைகள் ஐடி கம்பெனிகளில் வேலை செய்பவர்களுக்கான வேலை நெருக்கடி குறித்த காரியங்கள் பேசப்பட்டது பல்லுயிர் பெருக்க தினம் (மே 22) பல்லுயிர்பெருக்கதினம் பிரச்சாரத்தில் 410 பேர் கலந்துள்ளனர்.

# பெண்கள் இணைப்புக்குழு தினம்:











ஜூன் 4-ல் நடைபெற்ற பெண்கள் இணைப்பு குழு தின பிரச்சாரத்தில் இந்த ஆண்டு 955 பேர் கலந்து கொண்ட 56 பிரச்சாரம் நடைபெற்றது.

# சுற்றுச்சூழல் தினம்:




திருவண்ணாமலையில் சுற்றுச்சூழல் பிரச்சார இயக்கம்

❖ இயற்கை வளங்களைக் காக்க வேண்டும், இயற்கை வேளாண்மையை முன்னெடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அம்சங்களை வலியுறுத்தி திருவண்ணாமலையில் ஞாயிறன்று பேருந்து நிலையம் அருகே உள்ள அறிவொளி பூங்கா அருகே சுற்றுச்சூழல் பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

ஜூன் 5 சுற்றுச்சூழல் தின 27பிரச்சாரத்தில்754 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# 29ஆவது பெண்கள் இணைப்பு குழு மாநில மாநாடு:


மாநாடு துவக்க விழா

09-08-2024 வெள்ளிக்கிழமை

பட்டிமன்றம்

பெண்களை உள்ளடக்கிய முன்னேற்றம்

பொதுக்கூட்டம்

இரண்டாம் நாள்

தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு

29-வது மாநில மாநாடு

அழைப்பிதழ்

"பெண்களை உள்ளடக்கிய முன்னேற்றம்"

தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு

Website : www.womenscollective.net

இமெயில் : tamilnaduwomenscollective@gmail.com

2024 ஆம் ஆண்டு 29 ஆவது பெண்கள் இணைப்பு குழு மாநில மாநாடு திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை மீனாட்சி மகாலில்

**ஆகஸ்ட்** 9,10 தேதிகளில் நடைபெற்றது பெண்களை உள்ளடக்கிய முன்னேற்றம் என்ற தலைப்பில் நடந்தது.

தமிழ்நாட்டில் 234 சட்டமன்ற தொகுதிகளில் 12 பெண் உறுப்பினர்கள் மட்டுமே உள்ளன அது ஐந்து விழுக்காடு மட்டுமே இந்திய ஒன்றியத்தில் 12.79 விழுக்காடு பெண்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளனர் 33 விழுக்காடு இட ஒதுக்கீடு இத்தனை ஆண்டுகளாகியும் வழங்க மறுக்கிறார்கள் இந்திய வேகமாக நகரமயமாகி வருகிறது அதில் தமிழ்நாடு தான் முதல் இடத்தில் உள்ளது ஏற்றத்தாழ்வுகள் அதிகம் உள்ளது நூற்றுக்கு ஐந்து நபர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளன நம் நாட்டின் கணக்கெடுப்பு படி கிராமத்தில் சராசரி வருமானம் 25 ரூபாய் நகரத்தில் 33 ரூபாய் கீழ் வருமானம் உள்ளவர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் என்று கணக்கிடப்படுகிறது இந்த வருமானத்தை வைத்து குடும்பம் நடத்த முடியுமா? சராசரி ஒரு நாளைக்கு ஒரு குடும்பத்திற்கு ₹300 தேவைப்படுகிறது நாம் ஆரோக்கியமாக வாழ உடல் நலம் மனநலம் சுத்தமான காற்று சுற்றுச்சூழல் வேண்டும் நாம் தேர்ந்தெடுக்கும் மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்காக திட்டம் போடுபவர்களாக இருக்க வேண்டும் குடும்ப வருமானம் தேடும் பொறுப்பு பெண்கள் தலையில் சுமத்தப்படுகிறது இந்த நிலையில் பேரழிவை தினமும் சந்திக்க வேண்டி உள்ளது மாநாடு துவக்க விழாவில் பெண்கள் இணைப்புகளும் மாநில தலைவி திருமதி.ஷீலு அவர்கள் காவல்துறை ஆய்வாளர் கவிதா, அவர்கள் சைபர் கிரைம் உதவி காவல் ஆய்வாளர் செந்தில் அவர்கள், பேராசிரியர் கனிமொழி அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் வீரமணி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.











மாலை இதழ்
MAALAI ETHAZH
RNI : TNTAM2016/72616


## பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யும் மசோதாவை நடைமுறைப்படுத்த வேண்டும்

### 16 அம்ச தீர்மானங்களை தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் 29 வது மாநில மாநாட்டில் நிறுவப்பட்டது

திருவண்ணாமலை, ஆக.13–

திருவண்ணாமலை மீனாட்சி திருமண மண்டபத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் 29 வது மாநில மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பெண்களை உள்ளடக்கிய முன்னேற்றம் என்ற தலைப்பில் இரண்டு நாட்கள் 29 வது மாநில மாநாடு நடைபெற்றது.

இதில் தமிழகம் முழுவதும் இருந்து 500க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு மாநில மாநாட்டின் துவக்கமாக கொடி ஏற்றி துவக்கி விழா நடைபெற்றது. பெண்களை உள்ளடக்கிய முன்னேற்றம் என்ற தலைப்பில் பட்டிமன்றமும் மறுநாள் மிகப் பிரமாண்டமான பொதுக்கூட்டமும் திருவண்ணாமலை திருவூடல் தெருவில் நடைபெற்றது.



இந்தக் கூட்டத்திற்கு மாநில தலைவி திருமதி ஷீலு தலைமை தாங்கினார். திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுமதி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை வழி நடத்தினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக குற்றவியல் காவல் ஆய்வாளர் கவிதா, ஓய்வு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் வீரமணி, பேராசிரியர் கனிமொழி, மருத்துவர் அனுராதா, மாநிலச் செயலாளர் பொன்னுத்தாய், கன்னியாகுமரி மாவட்டம் லிட்வின் மேரி உள்ளிட்ட 22 மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பொதுக் கூட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மகளிருக்கு மாநில நிதி அறிக்கையில் 50 சதவீதம் நிதி ஒதுக்கப்பட வேண்டும், பூரண மதுவிலக்கு அமல்படுத்த வேண்டும், பாலின பிரச்சனைகளை கண்காணிக்க ஒவ்வொரு கிராம அளவில் கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும், சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யும் மசோதாவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 16 அம்ச தீர்மானங்களை இந்த மாநில மாநாட்டில் நிறைவேற்றினர்.

மதியம் பெண்களை உள்ளடக்கிய முன்னேற்றம் சாத்தியமா சாத்தியமில்லையா என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது திருமிகு லிட்வின் அவர்கள் நடுவராக இருந்து பட்டிமன்றத்தை வழி நடத்தினார்கள்.

மாலை பொதுக்கூட்டம் நடைபெற்றது இரண்டாம் நாள் காலை கருத்தரங்கு அமர்வு நடைபெற்றது பெண்கள் இணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள் பணியாளர்கள் மேலும் பல கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள் எதிர்காலத் திட்டம் மதிப்பீடு தீர்மானம் உறுதிமொழி அமர்வு நடைபெற்றது மாநாட்டில் ரெண்டு நாட்கள் 547 பேர் கலந்து கொண்டனர்.

# *உலக முதியோர் தினம்:*










அகில உலக முதியோர் தினம் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பாக திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் ஒன்றியம் பெரியேரி கிராமத்தில் நடைபெற்ற முதியோர்கள் இணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர் சுமதி மற்றும் போளூர் வட்டார ஒருங்கிணைப்பாளர் பாண்டியன் கருத்துரைகள் வழங்கினர் பெண்கள் இணைப்பு குழு அனிதா வரவேற்றார் லட்சுமி பவுன்னா ம்மாள் அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது பெண்கள் இணைப்பு குழு பணியாளர் சாந்தி நன்றி கூறினார் இந்நிகழ்வில் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

ஆகஸ்ட் முதல் நாள் நடைபெற்ற முதியோர் தின கூட்டத்தில் **21** மாவட்டங்களில் நடந்த **37** நிகழ்வுகளில் **1689** முதியோர்கள் கலந்து கொண்டனர்.

# உணவு தினம்:








அக்டோபர் 16 நடந்த உலக உணவு தினத்தை முன்னிட்டு நடத்திய **19** பிரச்சாரக் கூட்டங்களில் 1481 பேர் கலந்து கொண்டனர் உலக உணவு தினத்தை முன்னிட்டு சிறுதானிய உணவு பதார்த்தங்கள் போட்டி நடத்தப்பட்டது பரிசுகள் வழங்கப்பட்டது காலநிலை மாற்ற சூழலில் எதிர்கால உணவு என்பது சிறுதானியங்கள் மட்டுமே என்பது குறித்து பேசப்பட்டது

# பாரம்பரிய விதை திருவிழா:









பக்கம் 4

தின காற்று
DHINA KAATTRU
Tamil Morning Daily

மலர்: 9 | இதழ்: 178 | 26.08.2024 | திங்கட்கிழமை | பக்கம் 4 | விலை : 5/ | சென்னை
Volume: 9 | Issue: 178 | 26.08.2024 | Monday | Page: 4 | Price : 5/ | CHENNAI

## தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் பாரம்பரிய விதைத் திருவிழா!

தென்காசி, ஆக.26 தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் அருகே உள்ள பச்சேரி கிராமத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் பாரம்பரிய விதைத்திருவிழா மற்றும் கால நிலைக்கு ஏற்ப ஏற்ற உணவான சிறுதானியங்கள் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் மாரியம்மன் கோவில் அருகில் நடைபெற்றது.

விழாவிற்கு, களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்க மாநில தலைவர் பொன்னுத்தாய் தலைமை வகித்தார். பச்சேரி ஊர் நாட்டாமைகள், விவசாய சங்கத் தலைவிகள் வெள்ளத்தாய், சித்ரா, தங்கமாரி, தங்கத்தாய் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வாசுதேவநல்லூர் பெண்கள் இணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர் பூமாரி அனைவரையும் வரவேற்று பேசினார். விழாவில் நவதானியங்கள் உணவு பற்றியும், பாரம்பரிய விதை பயன்படுத்துவதின் அவசியத்தை பற்றி விவசாயிகளுக்கும் எடுத்துரைக்கும் வண்ணம், நவ தானியங்கள் மற்றும் பாரம்பரிய விதைகள் ஏந்தி பெண்கள் விழிப்புணர்வு நகர்வலம் வந்தனர். இந்நிகழ்ச்சியில் தமிழர் பாரம்பரிய கலை காளான கனியலாட்டம், ஒயிலாட்டம், கும்மியாட்டம் போன்றகலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிகழ்ச்சியில் நெல்கட்டும் செவல் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியராஜா, மற்றும் ஒன்றிய கவுன்சிலர் விமலா மகேந்திரன் மற்றும் பெண் விவசாயிகள், பெண்கள் இணைப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளானோர்கலந்து கொண்டனர்.

முடிவில் பெண்கள் இணைப்புகுழு உறுப்பினர் லட்சுமி நன்றி கூறினார்.

பாரம்பரிய சிறுதானியங்கள் கம்பு சோளம் கேழ்வரகு குதிரைவாலி திணை சாமை வரகு பணி வரகு காடைக்கண்ணி போன்ற ஒன்பது தானியங்கள் பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் மூலிகை வகைகள் போன்ற பாரம்பரிய விதைகளை நாம் மீட்டெடுக்க வேண்டும் இதுதான் நம்முடைய ஆரோக்கியத்திற்கு ஏற்ற உணவு வகைகள் என்பதை குறித்த 19 பாரம்பரிய விதை திருவிழாக்களில்1376 பெண் விவசாயிகள் பங்கேற்றனர் ஊர்

பொதுமக்கள் சிறுவர்கள் குழந்தைகள் இளைஞர்கள் இவர்கள் பங்கேற்புடன் அரசு அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் கலந்து கொண்டு விதை திருவிழா நடத்தப்பட்டது விதைகளை பகிர்ந்து கொண்டனர்.

# *உலக பெண் குழந்தைகள் தினம்:*














உலகப் பெண் குழந்தைகள் தின பிரச்சாரத்தில் 638 சிறுவர்கள் கலந்து கொண்டனர் இந்த பிரச்சாரத்தில் சிறுவர்கள் குறிப்பாக பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள் குழந்தைகள் உரிமைகள் மற்றும் அவர்கள் ஆளுமை திறனை வளத்தெடுக்கும் கருத்துக்கள் போன்ற விஷயங்கள் பேசப்பட்டது.

# களஞ்சியம் பெண் விவசாயிகள் மாநாடு:











13-12-2024 Tn 96 news 2

## கோவில்பட்டியில் பெண் விவசாயிகள் மாநில மாநாடு

தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் களஞ்சியம் பெண் விவசாயிகள் மாநில மாநாடு கோவில்பட்டி பைரவா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. வாசுதேவநல்லூர் பெண் விவசாயிகள் சங்கத்தலைவர் பொன்னுத்தாய் தலைமை தாங்கினார். தூத்துக்குடி பெண் விவசாயிகள் சங்கத்தலைவர் அருள்செல்வி வரவேற்று பேசினார். தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் மாநில தலைவி ஷீலு பெண் விவசாயிகளும், பூமி பந்தின் பாதுகாப்பும் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

மாநாட்டை வாழ்த்தி சுருத்தரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு தலைவர் தமிழரசன், ஜெயபிரேம் அறக்கட்டளை தலைவர் வழக்கறிஞர் ஜெயஸ்ரீ ஆகியோர் பேசினார்கள். கன்னியாகுமரி பெண்கள் இணைப்பு குழுவின் தலைவர் லீட்வின் தலைமையில் பூமிப்பந்து பாதுகாக்க படுகிறதா? இல்லையா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

மாநாட்டில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, மதுரை, நீலகிரி, தேனி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர்.
















வடமாவட்ட களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்க மாநாடு **ஜூன்** 2 ,3 தேதிகளில் சென்னை பெண்கள் இணைப்பு குழு அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது பெண்களை உள்ளடக்கிய முன்னேற்றம் என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது வட மாவட்டத்திலிருந்து அதிகமான விவசாயிகளும் தென் மாவட்டங்களில் இருந்து ஒரு சில பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர் இரண்டு நாட்கள் நடந்த இந்த மாநாட்டில் 100 பெண் விவசாயிகள் கலந்து கொண்டனர்

களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்க தென் மாவட்ட மாநாடு டிசம்பர் மாதம் 12 ,13 தேதிகளில் பெண்களும் பூமிப்பந்தின் பாதுகாப்பும் என்ற தலைப்பில் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பைரவா மஹாலில் நடைபெற்றது 193 உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மனிதர்கள் உயிர் வாழக்கூடிய ஒரே கோள் பூமி ஆனால் அதை மனிதர்களும் அரசு வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் மோசமான நிலையில் மாசு படுத்தி வருகிறோம் ஆதலால் கார்பன் மாசுபாடு பூமி வெப்பமயமாகி காலநிலை மாற்றம் ஏற்பட்டு வருகிறது நாம் பூமியை காப்பாற்ற விவசாய முறை உணவு முறை வாகன பயன்பாடு மரம் நடுதல் சிறுதானிய விவசாயம் செய்ய வேண்டும் என்பது குறித்த தீர்மானம் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

# *பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்பு இரு வார பிரச்சாரம்:*








26-11-2024 Tn 96 news 2

பெண்கள் மீதான வன்முறை ஒழிப்பு தினம்

கோவில்பட்டியில் விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம்

நவம்பர் 25 அகில உலக பெண்கள் மீதான வன்முறை எதிர்த்து தினம் முதலில் **டிசம்பர் 10** மனித உரிமை நாள் வரை இரு வார பிரச்சாரம் ஒவ்வொரு வருடமும் பெண்கள் இணைப்பு குழு செய்து வருகிறது **21** பிரச்சாரங்களில் **11, 863** நபர்கள் பங்கெடுத்துள்ளனர்.

## *2025 சிறுதானிய பொங்கல்:*





2023 ஆம் ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டதில் இருந்து ஒவ்வொரு வருடமும் தைத்திருநாளில் சிறுதானிய பொங்கல் வைக்கப்படுகிறது அருகில் உள்ள மற்றவர்களையும் அழைத்து அனைவரும் சேர்ந்து சிறுதானிய பொங்கலிட்டு வருகின்றனர் அந்த வகையில் இந்த 2025 ஆம் ஆண்டு சிறுதானிய பொங்கல் வைக்கப்பட்டது.

## *OBR பிரச்சாரம்:*






**100 கோடி** பெண்களின் எழுச்சிப் பிரச்சாரம் பிப்ரவரி 14 அன்று பெண்கள் இணைப்பு குழு மதுரை ஏக்தா அமைப்போடு இணைந்து ஒவ்வொரு வருடமும் நடத்தி வருகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் 14 இல் மதுரையில் நடந்த OBR பிரச்சாரத்தில் பெண்கள் இணைப்பு குழு மதுரை தேனி திண்டுக்கல் மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் கலை நிகழ்ச்சிகள் கொடுக்கப்பட்டது மேலும் ஒவ்வொரு வட்டாரமும் 21 மாவட்டங்களில் இந்த OBR பிரச்சாரங்களை கிராமங்களில் வட்டாரத்தில் மாவட்டங்களில் நடத்தப்பட்டது அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு முழுமையான முன்னேற்றம் கிடைப்பதில்லை பெண்கள் பிரச்சினைகளுக்கு காரணம் டாஸ்மாக் கடை மற்றும் போதை பொருட்களும் தான் ஆண்களும் இளைஞர்களும் குடித்துவிட்டு குடும்பங்களை சரியாக கவனிக்க முடியாத நிலையில் பெண்கள் அதிகமான கடன் வாங்கி குடும்பத்தை நடத்தி கடனில் மூழ்கி சிக்கித் தவிக்கிறார்கள் மைக்ரோ பைனான்ஸ் மற்றும் வங்கிகள் பெண்களை நம்பித்தான் கடன் கொடுக்கிறார்கள் பெண்கள் கடன் வாங்கி குடும்பத்தை நடத்தி கடன் கட்ட முடியாமல் பல்வேறு சிரமங்களை சந்திக்கிறார்கள். குடும்பத்தில் பெண்களின் உழைப்பு அதிகமாக இருக்கிறது பெண்கள் பொருளாதார ரீதியாக பலப்படுத்தப்பட வேண்டும் இதுபோன்ற பெண்கள் பிரச்சனைகளை தடை செய்யத்தான் உலக அளவில் **100** கோடி பெண்களின் எழுச்சி பிரச்சாரம் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

**3,403** பெண்கள் பங்கெடுத்த **103** பிரச்சாரங்கள் பெண்கள் இணைப்பு குழு நடத்தியது.

# *உலக பெண்கள் தினம் (மார்ச் 8):*







பக்கம் 3

தின காற்று

DHINA KAATTRU

Tamil Morning Daily

நடுநிலைக் காலை நாளிதழ்

தமிழகம் மற்றும் புதுவையில்...

| மலர்: 10 | இதழ்: 8 | 09.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | பக்கம் 4 | விலை : 5/ | சென்னை |
|---|---|---|---|---|---|---|
| Volume: 10 | Issue: 8 | 09.03.2025 | Sunday | Page: 4 | Price : 5/ | CHENNAI |


## வாசுதேவநல்லூரில் மகளிர் தின விழா

தென்காசி,மார்,9

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு வாசுதேவநல்லூர் வட்டாரம் சார்பில் உலகப் பெண்கள் தின விழா காமராஜர் திருமண மண்டபத்தில் நடந்தது. விழாவிற்கு பெண்கள் இணைப்பு குழு மாநில செயலாளர் பொன்னுத்தாய் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். பெண்கள் இணைப்பு குழு மாவட்ட பிரதிநிதிகள் சுப்பம்மாள், ஜெயலட்சுமி, டி.என் புதுக்குடி புளியங்குடி பெண்கள் இணைப்பு குழு வட்டார தலைவி இந்திரா, நிர்வாகிகள் முத்தம்மாள், அபிராமி, தங்கமாரி, கணபதியம்மாள், சின்னப்பொண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர் .பெண்கள் இணைப்பு குழு தாமரைச்செல்வி அனைவரையும் வரவேற்றார். வாசுதேவநல்லூர் வளர் இளம் பெண்கள் சங்க நிர்வாகி தங்கலட்சுமிநிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். வாசுதேவநல்லூர் மகாத்மா காந்தி சேவா சங்கத் தலைவர் கு.தவமணி, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சிவராஜ், ஓய்வு பெற்ற ஆசிரியர் கோபால்சாமி, கம்யூனிஸ்ட் கட்சி மருதையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள் தூத்துக்குடி அருள் செல்வி, கோவில்பட்டி மேரி ஷீலா, களக்காடு ஜெயலட்சுமி ஆகியோர் பெண்கள் விழிப்புணர்வு குறித்து கருத்துரை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள் பெரியாண்டவர், நவநீத கிருஷ்ணன், தனி ஒருவன் என்ற சுரேஷ் விழாவில் ஏராளமான பெண்கள்கலந்து கொண்டனர். முடிவில் வெள்ளானை கோட்டை பெண்கள் இணைப்பு குழு ராஜலட்சுமி அனைவருக்கும்நன்றி கூறினார். விழாவில் வாசுதேவநல்லூர் பொதிகை சாரல் கலைக்குழுவின் சார்பில் தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.







தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு உலகப் பெண்கள் தினத்தை 2025 மார்ச் மாதம் முழுவதும் கிராம அளவில் பஞ்சாயத்து அளவில் வட்டார அளவில் மாவட்ட அளவில் **87** பிரச்சாரம் நடத்தியது **9,741** பேர் கலந்து கொண்டுள்ளனர் ஐநா சபை இந்த ஆண்டு உலகப் பெண்கள் தினத்திற்கு கொடுக்கப்பட்ட தலைப்பு செயலை துரிதப்படுத்து . பெண்கள் குழந்தைகள் உரிமை சமத்துவம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் இவற்றிற்கான வாய்ப்புகளை உருவாக்கு என்ற கருத்தாக்கங்களை முன் வைத்தது. ஒவ்வொரு வட்டாரங்களிலும் பொதுக் கூட்டமாக அரங்கு கூட்டமாக பஞ்சாயத்து கூட்டமாக கிராம கூட்டமாக ஆர்ப்பாட்டமாக நடைபெற்றது பாலின சமத்துவத்திற்கான திட்டங்களை அரசு செயல்பாட்டிற்கு கொண்டு

வர வேண்டும் பள்ளி கல்லூரிகளில் பாடத்திட்டமாக வரவேண்டும் அதிகாரம் அளித்தலுக்காக சட்ட மன்ற பாராளுமன்றத்தில் 33 விழுக்காடு இட ஒதுக்கீடு தரவேண்டும் கட்சிப் பொறுப்புகளில் பெண்களுக்கு 50 இட பொறுப்புகளை தர வேண்டும் குழந்தைகள் பெண்களுக்கான சட்டங்கள் இருந்தாலும் ஏற்றளவில் மட்டும் இல்லாமல் செயல்பாட்ட அளவில் சட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் கண்காணிக்க வேண்டும் மத்திய மாநில பெண்கள் ஆணையங்களுக்கு அதிகாரம் நிதி ஒதுக்க வேண்டும் அனைத்து நிதி ஒதுக்கீட்டிலும் 33 **விழுக்காடு** பெண்களுக்கான நிதி ஒதுக்க வேண்டும் வருமானம் என்ற பெயரில் அரசு நடத்தும் டாஸ்மாக் கடைகள் போதை பொருட்கள் பெண்கள் குழந்தைகள் மீதான வன்முறைக்கு காரணமாகிறது பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் போதை பொருட்கள் வருங்கால இளைஞர்களை மோசமான நிலைக்கு தள்ளுகிறது இதை அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் பெண் தொழிலாளர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த தொழிலாளர் உரிமை சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள் உடனடியாக தடை செய்யப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.

## *ஆண் விவசாயிகள் அறிவு பகிர்வு மாநாடு:*









RNI NO:TNTAM/2021/82250

தின மடை

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

DINAMADAI MORNING DAILY

18.12. 2024. மதுரை



மதுரை நாகமலை புதுக்கோட்டை பில்லா சாலை தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சென்டரில் ஹோமில் ஆண் விவசாயிகள் அறிவிப்பகிர்வு இரண்டு நாட்களாக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது இன்று முதல் நாளாக 100 க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர் பருவநிலை மற்றும் இயற்கை விவசாயம் மண்வளம் பாதுகாத்தல், கூட்டுப் பண்ணை அமைத்தல் பண்முக பயிர் செய்தல் இயற்கை உரம் பூச்சி விரட்டி தயாரித்தல் இதைப் பற்றி பயிற்சிகள் அளிக்கப்பட்டது பயிற்சியாளர் ஷீலு பிரான்சிஸ் பெண்கள் இணைப்பு குழு மாநில தலைவர் அவர்கள் வானகம் அமைப்பு வெற்றிமாறன் அவர்கள் பயிற்சி அளித்தார் இதில் ஆண் விவசாயிகள் தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள்

யூடிப் பொறுப்பாசிரியர் LIVE NEWS பாண்டீஸ்வரன்

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் **18,19** தேதிகளில் ஆண் விவசாயிகளுக்கான அறிவு பகிர்வு மாநாடு மதுரை மாவட்டம் நாகமலை புதுக்கோட்டை பில்லர் ஹவுஸ் என்ற இடத்தில் நடத்தப்பட்டது .அதில் நம்முடைய மாநில தலைவி ஷீலு அவர்கள் கலந்து கொண்டு பெண்கள் இணைப்பு குழுவின் விவசாய செயல்பாடுகள் குறித்து பேசினார்கள் நம்மாழ்வார்னுடைய வானகம் அமைப்பிலிருந்து வந்திருந்த திருமிகு வெற்றிமாறன் அவர்கள் இயற்கை விவசாயம் இயற்கை உரங்கள் பூச்சுவிரட்டிகள் பண்ணை விவசாயம் பல பயிர் சாகுபடி போன்ற விஷயங்களை மக்களோடு பகிர்ந்து கொண்டார்கள் மக்களும் அவர்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள் காலநிலை மாற்ற சூழலில் நம்முடைய விவசாயம் முறையை மாற்ற வேண்டிய சூழலில் இருக்கிறோம் இயற்கை விவசாயத்திற்கு மாற வேண்டும் என்பதைக் குறித்து பூவுலகின் நண்பர்கள் அமைப்பிலிருந்து வந்திருந்த திருமிகு வெற்றிமாறன் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள் சென்னை மூத்த பத்திரிக்கையாளர் திருமதி டி எஸ் எஸ் மணி அவர்கள் வந்திருந்து நாம் விவசாயிகளாக சங்கங்களாக ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் விவசாயிகளுடைய பிரச்சனைகள் நாம் அதற்காக அணி திரள வேண்டிய சூழல்கள் குறித்து பேசப்பட்டது.

ஆண் விவசாயிகள் பெண் விவசாய சங்கங்களை குறித்து அவர்கள் செயல்பாடுகளை குறித்து தெரிந்து கொண்டோம் இயற்கை விவசாயம் காலநிலை மாற்றம் குறித்து அறிந்து கொண்டோம் எங்கள் விவசாய முறைகளை மாற்றி செய்ய முடிவெடுத்துள்ளோம் பெண்கள் இணைப்பு குழு அமைப்பு பெரிய அமைப்பு மக்களுக்கு நல்லது செய்யக்கூடிய அமைப்பு

அவர்கள் தலைமையில் நாங்கள் இருப்பதில் பெருமை கொள்கிறோம் தொடர்ந்து செயல்படுவோம் என்று பகிர்ந்து கொண்டார்கள்.

## *சிறுதானிய மதிப்பு கூட்டுதல்:*

2023 ஆம் ஆண்டு சிறுதானிய ஆண்டாக இருப்பதாலும் பெண்களிடம் குழு கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாப்பான சத்தான உணவுக்காகவும் குடும்ப உணவு உற்றவாதிக்காகவும் சிறுதானிய விவசாயத்தை ஊக்கப்படுத்தி வருகிறது அந்த அடிப்படையில் சிறுதானியங்களில் மதிப்பு கூட்டல் செய்து உறுப்பினர்களின் குடும்பங்களில் நடக்கும் விழாக்களில் பெண்கள் இணைப்பு குழு கூட்டங்களில் மாநாடுகளில் பள்ளி கல்லூரியில் நாங்கள் நடத்தும் கூட்டங்களில் சிறுதானிய உணவுகள் பலகாரங்கள் செய்து கொடுத்து வருகிறோம்.

மேலும் செங்கல்பட்டு மாவட்டம் கடப்பாக்கம் வட்டாரத்தில் மல்லிகை பெண்கள் இணைப்பு குழு சுய உதவி குழு ECR ரோட்டில் சிறுதானிய உணவகத்தை ஆரம்பித்துள்ளது பல்வேறு வட்டாரங்கள் சிறுதானியங்களை விளையும் இடங்களில் இருந்து வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள். மற்றவர்களுக்கும் அரிசியாகவும் பலகாரமாகவும் சத்துமாவாகவும் செய்து கொடுத்து வருகிறார்கள். இதன் மூலம் மக்களின் ஆரோக்கியமும் வளர்ந்துள்ளது மருத்துவச் செலவு குறைந்துள்ளது.

## *முழுமையான சிறுதானிய கிராமம்:*

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுக்கா கெலமங்கலம் ஒன்றியம் பெட்ட முகிலாலம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட கடமை குட்டை கிராமத்தில் உள்ள 55 குடும்பங்களில் 40 குடும்பங்கள் இருளர் இன மக்களாகவும் 15 குடும்பங்கள் பிசி மக்களாகவும் உள்ளனர் மொத்த உறுப்பினர்கள் 250 பேர் உள்ளனர் இந்த கிராமத்தின் நிலப்பரப்பு 100 ஏக்கர் உள்ளது இங்கு வசிக்கும் மக்கள் மத்தியில் இரண்டு ஆண்கள் சங்கம் 30 உறுப்பினர்கள் இரண்டு பெண்கள் சங்கம் 40 உறுப்பினர்கள் அதோடு 5 கூட்டு விவசாய குழு 50 உறுப்பினர்கள் என ஆரம்பித்து செயல்படுத்தி வருகிறோம் ஆரம்ப காலகட்டத்தில் மலைவாழ் மக்கள் இருளர் இன மக்களை சார்ந்தவர்கள் அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு விறகு வெட்டி காட்டில் உள்ள சிறுவனப் பொருட்கள் தேன் எடுத்து அதை சந்தையில் விற்று அன்றாட

வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள் அந்த தருணத்தில் அந்த கிராமத்தில் உள்ள ஊர் கவுண்டர் ஒருவரின் நிலத்தில் 80ஏக்கர் நிலத்தை இந்த மக்களுக்கு விவசாயம் செய்வதற்காக கொடுக்கப்பட்டது. அந்த கிராமத்தில் உள்ள நிலம் முழுவதும் வானம் பார்த்த பூமியாக இருப்பதால் சிறு தானிய உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு இந்த கிராமத்தை ஒரு முன்மாதிரி சிறு தானிய கிராமமாக அதுவும் முழுமையான சிறுதானிய கிராமமாக மாற்ற போதுமான விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் கொடுத்ததின் அடிப்படையில் சிறு தானிய பயிர்கள் ஆகிய ராகி,கம்பு, சோளம்,திணை, சாமை,வரகு போன்றவையும் எண்ணெய் வித்துக்களாகிய சூரியகாந்தி, எள்ளு, ஆமணக்கு, நிலக்கடலை போன்றவையும் பயிர் வகைகளாக அவரை, துவரை, கொள்ளு, காராமணி தட்ட பயிறு ஆகியவையும் காய்கறிகளாக கத்திரிக்காய், மிளகாய், பீர்க்கங்காய், பூசணிக்காய், கொத்தவரை, கீரை வகைகள், தானா விளையும் கீரைகள் போன்றவற்றை பயிர் செய்து குடும்ப அளவிலான உணவு உத்தரவாதத்தின் அவசியம் உணர்ந்து குடும்பத்துக்கு தேவையான தானியங்களை எடுத்து வைத்து உட்கொள்கிறார்கள் இவர்களின் செயல்பாடுகளை பார்வையிட டிடிஎஸ் என்ற அமைப்பில் இருந்து வந்திருந்தார்கள் மேலும் இவர்கள் சிறுதானிய சகோதரிகள் அமைப்போடு இணைந்து செயல்படுவதை பார்த்து அந்த அமைப்பு மாவு அரைக்கும் மிஷின் ஒன்று ரூபா **48,350** மதிப்புமிக்க வழங்கப்பட்டது அது மட்டுமல்லாமல் முழுமையான சிறுதானிய கிராமமாக மாற்ற பாலக்கோடு வட்டார பெண்கள் இணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் **ரங்கநாயகி** அவர்கள் முன்னெடுத்து சென்றனர். இதனை பாராட்டி தமிழ்நாடு பெண்கள் நினைப்பு குழு கேஷ் அவார்டாக ரொக்க பணம் ரூபாய் 50,000 இந்த கிராமத்திற்கு நமது மாநில தலைவி திருமிகு ஷீலு அவர்களால் வழங்கப்பட்டது.

இந்த மலையில் உள்ள மற்ற கிராமங்களுக்கும் சென்று சிறுதானியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தபோவதாக பேசினார்கள்.

## *விவசாயம் குறைதீர்ப்பு நாள் கூட்டம்:*

ஒவ்வொரு மாவட்டத்திலும் நாலாவது வெள்ளிக்கிழமை அல்லது வியாழக்கிழமைகளில் நடக்கும் விவசாய குறை திருப்பு நாள் கூட்டங்களுக்கு பெண்கள் இணைப்பு குழுவின் பெண் விவசாயிகள் 77 கூட்டங்களில் 931 பேர் பங்கேற்றன ஆண் விவசாயிகள் ஆச்சரியமாக பார்த்தாலும் மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுடைய பிரச்சனைகளுக்கு இணைந்து செயல்பட வழி வகுத்துள்ளது.

## வீட்டுத் தோட்டம் மாடித்தோட்டம்:

இந்த ஆண்டு சிறுவர்கள் மற்றும் பெண்கள் போட்டுள்ள வீட்டுத் தோட்ட மாடி தோட்டம் எண்ணிக்கை 14013.

## மகள் திருமணத்துக்கு நகைக்கு பதில் நிலம்:

இந்த ஆண்டு நகைக்கு பதில் மகள் திருமணத்திற்கு நிலமாக கொடுத்தவர்கள் 52 பெண் விவசாயிகள் 84. 87 ஏக்கர்.

## பெண்கள் பெயரில் நிலம்:

இந்த ஆண்டு பெண்கள் பெயரில் நிலம் 352 பேர் 198. 99 ஏக்கர் வாங்கியுள்ளார்கள்.

## முடிவுரை:

கடந்த 30 ஆண்டுகளில் பெண்கள் இணைப்பு குழு பல பிரச்சனைகளை சந்தித்த போதிலும் பெண்கள் இணைப்பு உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் எமது பணி சிறப்புடன் செயல்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் பார்க்கிறோம் எமது நிதி பற்றாக்குறை நேரங்களில் அனைவரது ஒத்துழைப்பும் தோழமையும் எமது அமைப்பிற்கு வலு கொடுத்தது உறுப்பினர்களின் பங்கேற்பும் பங்களிப்பும் சிறப்பாக இருந்தது.

மாநில தலைவியின் தொடர் வழி நடத்தலாலும், ஒருங்கிணைப்பாளர்கள், பணியாளர்கள், சங்கப் பிரதிநிதிகளாலும் அனைவரது தன்லை மற்ற பங்கேற்பால் இன்று எமது பெண்கள் இணைப்பு குழு 30 ஆண்டு நிறைவு செய்து 31 வது ஆண்டில் அடியெடுத்துள்ளது அனைவரது சார்பிலும் இந்த ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்கிறோம்.